# இஸ்லாத்தில் அரசியலமைப்பின் சிறப்புக்கள்

## 1 பன்னாட்டு உறவுகளின் அமைப்பு

இஸ்லாமிய அரசியலமைப்பு அடிப்படையிலேயே பன்னாட்டு உறவு களைக்கொண்டதாகும். இந்த உறவில் இயல்பானபன்னாட்டு உறவுக் கான ஆதாரம் இஸ்லாம் அளிக்கின்றது. ஏனெனில், இஸ்லாம் ஒரு உலகளாவிய மார்க்கமாகும், இது எந்த ஒரு குறிப்பிட்ட காலத்தையோ அல்லது இடத்தையோ சார்ந்தது அல்ல. மாறாக, இது அனைத்துக் காலங்களிலும் அனைத்துச் சமூகங்கள் மற்றும் நாடுகளிலும் நடை முறைப்படுத்துவதற்கான பொருத்தமான பண்புகளையுடையதாகும். மார்க்க அறிஞர்களான உலமாப் பெருமக்களுக்கு அவர்களிடத்தில் பெறப்படும் ஆதாரங்களின் அடிப்படையில் சமூகங்களில் எழும் பிரச் சினைகளுக்குத் தீர்வுகளைக்காணும் அற்றல்களின் அடிப்படையில் நவீனகால பிரச்சினைகளை ஆய்ந்தறிந்து தீர்வுகளை, அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கும் அதிகாரத்தையும் அளித்துள்ளது. இவ்வகை யில், அவர்கள் இஸ்லாமிய மார்க்கத்தின் கொள்கைகள் மற்றும் குறிக் கோள்களை நிறைவேற்றும் வகையிலும் இஸ்லாமியப் பொதுச் சட் டங்களின் எல்லைகளுக்குட்பட்டு இருப்பதும் இன்றியமையாதது என வலியுறுத்துகின்றது. இஸ்லாமியச் சட்டங்கள் இரு வகையானவை யாக அமைந்துள்ளன:

### 1 தெளிவான விரிவான சட்டங்கள்

திருக்ஃகுர்ஆனில் எந்தஒருவசனத்திலும் மிகத்தெளிவாகவேஅவற் றின் பொருளில் எவ்விதக்கருத்துவேறுபாட்டிற்கும் இடமில்லாத வகையில் காணப்படும் சட்டங்கள், அல்லது அதற்கான ஆதாரம் ஸஹீஹான நபிமொழிகளில் பெறப்பட்டுபவை. இச்சட்டங் களில் இஜ்திஹாது செய்யவேண்டிய கட்டாம் இருக்கும் அள வுக்கு எவ்விதக் குறையோ தெளிவின்மையோ இருக்கவில்லை. உதாரணமாக, தொழுகை, ஜ்ஸஃகாத், ஹஜ் மற்றும் வாரிசு களுக்கான சொத்துரிமை ஆகிய சட்டங்கள்.

### 2 திருக்ஃகுர்ஆன் வசனங்களில் காணப்படும் ஆதாரங்கள்

திருக்ஃகுர்ஆனில் ஆதாரங்கள் இருந்தும் அதனுடைய பொருள் மற்றும் விளக்கங்களில் உலமாப்பெருமக்களுக்கிடையே கருத்து வேறுபாடு நிலவுகின்ற சில மார்க்கச்சட்டங்கள் அல்லது வலுக் குறைவான (ஜ்தஈஃபான) ஆதாரத்துடன் அறிவிக்கப்பட்டுள்ள நபிமொழிகள் அல்லது ஸஹீஹான ஹதீத்ஸுகளாக இருந்த போதிலும், அதன் எந்த ஒரு பொருளின் விஷயத்திலும் உலமாக்



www.uzairfaahi.com

கள் ஒத்தக் கருத்தினைப் பெற்றிருக்கவில்லையோ அல்லது மார்க்கச்சட்டங்களின் (ஃபிஃக்ஹு) அடிப்படையிலான ஒரு கொடுக்கல் வாங்கல் சார்ந்த சட்டமாகவோ இருப்பது. இவ்வாறான பிரச்சினைகளில் ஒரு குறிப்பிட்ட இடத்திலோ அல்லது ஒரு குறிப்பிட்டக் காலக்கட்டத்திலோ இஸ்லாமியச் சமுதாயத்தினர்களுடைய ஒரு முக்கியத் தேவை நிறைவேறும் வகையில் முஜ்தஹிதீன்களான அறிஞர்கள் அதனை ஆய்ந்தறிந்து தங்களுடைய கருத்தினை மக்களுக்கு எடுத்துக்கூறும் உரிமையைப் பெற்றுள்ளனர். அத்துடன், இஸ்லாமிய மார்க்கச்சட்டங்களான ஷரீஅத்தின் உணர்வுப்பூர்வமான உறுதிப்பாடு நிலைத்திருக்கவும் மக்களுடைய நலன்கள் அவர்களுக்குச் சென்றடையவேண்டும் என்ற ஷரீஅத் மார்க்கச் சட்டங்களின் குறிக்கோள்களும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதாகும்.

## 2 தனிநபர் மற்றும் சமூகத்துக்கிடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு

இஸ்லாமியச் சமூக அமைப்பில் தனிநபர் மற்றும் சமுதாயத்திற்கிடையிலான உறவு பரஸ்பர ஒத்துழைப்பின் அடிப்படையிலானதாகும். தனிநபர் மற்றும் சமுதாயத்திற்கிடையே மோதலை உண்டாக்கும் எந்தக் கொள்கை அல்லது சிந்தனைகளையும் இஸ்லாம் ஆதரிப்பதுமில்லை அங்கீகரிப்பதுமில்லை. சில கொள்கைகள் தனிநபர்களுக்கு சமூகத்தின் மீது முன்னுரிமையும் மேன்மையும் அளிக்கின்றன, உதாரணமாக, முதலாளித்துவக்கொள்கைகள் மற்றும் அமைப்புகள். சில கொள்கைகள் சமூகங்களுக்கு தனிநபர்மீது முக்கியத்துவம் அளிக்கின்றன. உதாரணமாக, கம்யூனிஸக் கொள்கைகள். இஸ்லாம் இவ்விரண்டு கொள்கைகளிலிருந்தும் விலகி இவற்றிற்கிடையே சமச்சீரான பரஸ்பர உறவை நிலைநாட்டுகின்றது. இவ்வகையில், இஸ்லாம் தனிநபருடைய பொறுப்பினை அங்கீகரிப்பதோடு ஒவ்வொருவரும் தன்னுடைய செயல்களுக்கு பதில் கூறவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

أَلَّا تَزِرُ وَازِرَةٌ وِزْرَ أُخْرَىٰ ﴿٣٨﴾ وَأَن لَّيْسَ لِلْإِنسَانِ إِلَّا مَا سَعَىٰ ﴿٣٩﴾ النجم 8 . 39)

*பொருள்: சுமை சுமக்கும் எந்த ஒரு மனிதனும் மற்றவனின் சுமையைச் சுமக்கமாட்டான். மேலும், மனிதனுக்கு தான் முயற்சி செய்ததைத் தவிர வேறு எதுவும் கிடைப்பதில்லை (அந் நஜ்ம்:38,39)*

இஸ்லாம் தனிமனிதர்களை சமூகத்தாருடன் சேர்ந்து பரஸ்பர உறவு கொண்டிருப்பதையும் அதன்பால் தன்னுடைய பொறுப்பினை நிறைவேற்றுமாறும் ஊக்குவிக்கின்றது மற்றும் நன்மையானவற்றை மக்களி

www.uzairfalahi.com

டையே நிலைநாட்டி தீமையானவற்றைத் தடுத்து நிறுத்தும்படியும் வலியுறுத்துகின்றது. நனிநபர்கள்மீதும் தங்களுடைய மற்றும் தம்மு டைய சமூகத்தாரின்பால் பல்வேறு பெறுப்புகள் இருக்கின்றன, அவற்றை நிறைவேற்றுவது மிகவும் முக்கியமானதாகும்.

இஸ்லாம் ஒரு சமூகத்தின் கூட்டுப் பொறுப்புகளையும் வலியுறுத்து கின்றது. ஆகவேதான், அது நன்மைகளை ஏவி, ஊக்குவித்துத் தீமை யானவற்றைத் தடுத்து நிறுத்தும் பணியினைக் கட்டாயமானதாகவே ஆக்கியுள்ளது. இறைத்தூதர் ﷺ அவர்கள் சமூகத்தாருடைய பொறுப்பு களைப்பற்றிய ஒரு உதாரணத்தை இந்த நபிமொழியில் விளக்கிக் கூறுகின்றார்கள்:

**مَثَلُ القَائِمِ عَلَى حُدُودِ اللَّهِ وَالوَاقِعِ فِيهَا، كَمَثَلِ قَوْمٍ اسْتَهَمُوا عَلَى سَفِينَةٍ، فَأَصَابَ بَعْضُهُمْ أَعْلاَهَا وَبَعْضُهُمْ أَسْفَلَهَا، فَكَانَ الَّذِينَ فِي أَسْفَلِهَا إِذَا اسْتَقَوْا مِنَ المَاءِ مَرُّوا ع .لَى مَنْ فَوْقَهُمْ، فَقَالُوا: لَوْ أَنَّا خَرَقْنَا فِي نَصِيبِنَا خَرْقًا وَلَمْ نُؤْذِ مَنْ فَوْقَنَا، فَإِنْ يَتْرُكُوهُمْ وَمَا أَرَادُوا هَلَكُوا جَمِيعًا، وَإِنْ أَخَذُوا عَلَى أَيْدِيهِمْ نَجَوْا، وَنَجَوْا جَمِيعًا** (صحيح البخاري)

பொருள்: *அல்லாஹ் நிர்ணயித்த எல்லைகளுக்குட்பட்டு அவற்றைப் பேணுபவர்கள் மற்றும் அவற்றில் கருத்துவேறுபாடுகொண்டு குழப்பங் களைச் செய்பவர்களுடைய உதாரணமானது, ஒரு கப்பலில் பயணம் செய்பவர்கள் தங்களுக்கிடையே சீட்டு குலுக்கிப்போட்டு தாங்கள் பயணம் செய்யும் அமர்வுகளை முடிவு செய்பவர்களைப் போன்றதா கும். இதன் காரணமாக, சிலருக்கு மேல் தளத்திலும் சிலருக்குக் கீழ் தளத்திலும் பயணிக்கும் இடம் கிடைத்தது. கீழ்தளத்தில் பயணம் செய் பவர்களுக்குத் தண்ணீர் தேவைப்பட்டால் அவர்கள் மேல் தளத்திலுள் ளவர்களிடம் வந்து அங்கிருந்து தண்ணீர் எடுத்துச்செல்லவேண்டும். ஆகவே, அவர்கள், நாம் ஏன் கீழ் தளத்திலேயே ஒரு ஓட்டையைப் போட்டுக்கொண்டு தண்ணீரை எடுத்துக்கொள்ளக்கூடாது, மேல் தளத் திலிருப்பவர்களுக்கும் எங்களால் தொல்லை ஏற்படாது என்று எண்ணி ஒரு முடிவுக்கு வந்தார்கள். இந்நிலையில், மேல் தளத்திலிருப்பவர் களும் கீழ் தளத்திலுள்ளவர்கள் அவர்கள் நினைத்தவாறு செய்துகொள் ளட்டும் என்று விட்டுவிடுவார்களேயானால் அந்தக் கப்பலிலுள்ள வர்கள் அனைவருமே அழிந்துவிடுவார்கள். மாறாக, மேல் தளத்திலி ருப்பவர்கள்கீழ்தளத்திலுள்ளவர்களை அவ்வாறு செய்யவிடாது தடுத்து விடுவார்களேயானால் அவர்களும் தப்பித்துக்கொள்வார்கள் மற்றும் கப்பலிலுள்ளவர்கள் அனைவருமே அழிவிலிருந்து தப்பித்துக்கொள் வார்கள் (புக்ஹாரி).*

www.uzfalahi.com

ஆட்சியாளர்களுடனான தனி நபர்களுடைய உறவு பரஸ்பர ஒத்துழைப்பின் அடிப்படையிலானதாகும். இஸ்லாம் தனிநபர்களுக்கு அவர்களுக்கான உரிமைகள் வழங்கியுள்ளது, அத்துடன், அட்சியாளர்களுக்கு இறைவனால் கட்டளையிடப்பட்ட மார்க்கச் சட்டங்களைப்பின்பற்றி அவற்றை நிலைநாட்டுமாறு பணித்துள்ளது. ஆட்சியாளர்கள் எவ்விதக் காரணமுமின்றி தனிநபர்களுடைய விஷயங்களில் தலையீடு செய்வதிலிருந்து தடுத்தும் உள்ளது.

*அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

يَٰدَاوُۥدُ إِنَّا جَعَلْنَٰكَ خَلِيفَةً فِى ٱلْأَرْضِ فَٱحْكُم بَيْنَ ٱلنَّاسِ بِٱلْحَقِّ وَلَا تَتَّبِعِ ٱلْهَوَىٰ فَيُضِلَّكَ عَن سَبِيلِ ٱللَّهِ ﴿٢٦﴾ (ص 26)

*பொருள்: தாவூதே, நாம் உம்மை பூமியில் பிரதிநிதியாக ஆக்கியிருக்கின்றோம், எனவே, நீர் மக்களிடையே நீதியுடன் ஆட்சி செலுத்தும். மேலும், மன இச்சைகளைப் பின்பற்றாதீர். அது அல்லாஹ்வின் வழியிலிருந்து உம்மைப் பிறழச் செய்துவிடும் (ஸாத்:26).*

இஸ்லாம் முஸ்லிம் தனி நபர்களுக்குச் சில அடிப்படையான ஒழுக்கப் பண்புகளை நிர்ணயித்தள்ளது. இவ்வகையில், அவர்கள்மீது அல்லாஹ்வால் கடமையாக்கப்பட்ட ஷரீஅத் சட்டங்களைக் கடைபிடிக்கும் இஸ்லாமிய ஆட்சியாளர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதை கட்டாயமாக்கியும் உள்ளது. இவ்வகையான ஆட்சியாளர்களுக்கு ஒத்துழைப்பு அளிப்பது மட்டுமல்லாது அதனைப் பாதுகாப்பதற்காக தம் உயிரையும் பொருளையும் தியாகம் செய்யவேண்டியிருந்தாலும் அதனைச் செய்யும்படியும் வலியுறுத்துகின்றது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகின்றார்கள்:

اسْمَعُوا وَأَطِيعُوا وَإِنِ اسْتُعْمِلَ حَبَشِيٌّ كَأَنَّ رَأْسَهُ زَبِيبَةٌ (صحيح البخاري)

*பொருள்: உங்கள்மீது ஒரு ஆப்பிரிக்க அடிமையான ஒருவர் ஆட்சியாளராக நியமிக்கப்பட்டாலும் அவருடைய கட்டளைகளைச் செவியுற்று அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளுங்கள் (புக்ஹாரி)*

## 3 இஸ்லாமிய ஆட்சி இஸ்லாமியச் சமுதாயத்தின் ஒரு அங்கமாகும்

இஸ்லாமியசமுதாயத்தின்பகுதியாக இல்லாத ஒருஅந்நியரான ஆட்சியாளர் முஸ்லிம் சமூகத்தினர்மீது வலுக்கட்டாயமாக தம் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து ஆட்சி புரிவதை இஸ்லாம் விரும்புவதில்லை.



www.uzairfalahi.com

*அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ أَطِيعُواْ ٱللَّهَ وَأَطِيعُواْ ٱلرَّسُولَ وَأُوْلِي ٱلۡأَمۡرِ مِنكُمۡۖ ﴿٥٩﴾ (النساء 59)

பொருள்: *நம்பிக்கை கொண்டவர்களே, அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியுங்கள், அவனுடைய தூதருக்குக் கீழ்ப்படியுங்கள், மேலும், உங்களில் அதிகாரம் உடையவர்களுக்கும் (கீழ்ப்படியுங்கள்). (அந்நிசா:59)*

*அல்லாஹ் தஆலா கூறும்* مِنكُمۡ எனும் சொல் ஆட்சியாளர்கள் மற்றும் குடிமக்கள் ஆகியோரின் பண்புகளை வரையறைக்கின்ற வகையில் உள்ளது. அதாவது, ஆட்சியதிகாரம் முஸ்லிம்களுடைய ஆட்சியின்கீழ் இருக்கவேண்டும், முஸ்லிமல்லாதவர்களுடையது அல்ல. *அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

وَلَن يَجۡعَلَ ٱللَّهُ لِلۡكَٰفِرِينَ عَلَى ٱلۡمُؤۡمِنِينَ سَبِيلًا ﴿١٤١﴾ (النساء 41.)

பொருள்: *இறைநம்பிக்கையாளர்களுக்கு எதிராக நிராகரிப்பாளர்கள் மேலோங்க எவ்வழியும் அல்லாஹ் ஒருபோதும் வைத்திடமாட்டான் (அந்நிசா:141).*

## 4 போதனைகள் மற்றும் அடிப்படைக் கொள்கைகளுக்கிடையே ஒத்திசைவு

*இஸ்லாமியக் கலாச்சாரஅமைப்பு, அது ஒழுக்கப் பண்புகளைச் சார்ந்ததாகவோ, பொருளாதார அல்லது அரசியல் சார்புடையதாகவோ இருந்தாலும், அது ஒவ்வொன்றும் மற்றொன்றின்மீது தாக்கத்தினை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் தாமும் தாக்கத்தினைப்பெறும். உதாரணமாக, கல்வி மற்றும் ஒழுக்கப்பண்புகளின் அடிப்படைகள் இல்லாதபொருளாதாரஅமைப்புஅதற்கான உகந்தநிலையினை அடைந்துவிடவும் முடியாது, மக்களிடையே பரஸ்பர ஒத்துழைப்பினையும் ஏற்படுத்தாது. அவ்வாறு ஏற்படும் நிலையில், மிக எளிதாகவே அரசியல் அமைப்புகளில் குழப்பம் பரவலானதாக ஆகிவிடும்.*

### மேலைநாட்டு அரசியல் சட்டங்களும் இஸ்லாமியச் சட்டங்களும்

மேலை நாட்டுச் சட்டங்கள் பெரும்பான்மையை மட்டுமே சார்ந்திருக்கின்றன. அந்தப் பெரும்பான்மைதவறான முடிவினை மேற்கொண்டாலும் அல்லதுசரியானவையாகஇருப்பினும் சரியே. இந்தப் பெரும்பான்மை அடிப்படையிலான அரசியலமைப்பு சட்டங்களை நிறை

www.uzairfadahi.com

வேற்றுகின்றது மற்றும் மக்கள்மீது ஆட்சியும் புரிகின்றது. இதற்கு மாறாக, இஸ்லாமிய அமைப்பில் அல்லாஹ்வின் சட்டங்கள் மட்டுமே கடைபிடிக்கப்படுகின்றன, அல்லாஹ் மட்டுமே உண்மையான வகையில் சட்டங்களை வகுத்தளிப்பவனும் அதிகாரமுடையவனாகவும் இருக்கின்றான். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

إِنِ ٱلْحُكْمُ إِلَّا لِلَّهِ ﴿٤٠﴾ (سف 40)

பொருள்: *ஆட்சி செலுத்தும் அதிகாரம் அல்லாஹ்வைத்தவிர வேறு யாருக்கும் இல்லை (யூசுஃப்:40)*

முஸ்லிம் சமுதாயம் மற்றும் இஸ்லாமிய அரசு என்பது அல்லாஹ்வின் கட்டளைகள் மற்றும சட்டங்களுக்குட்பட்டு செயல்படும் ஒன்றாகவே உள்ளது மற்றும் அதனைக்கொண்டே சந்தோஷமும் நிம்மதியும் பெறுவதோடு அல்லாஹ்வுடனான திருப்பொருத்தத்தையும் பெறுகின்றது.

* * *

www.uzairfalahi.com